DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC No. 703/2022 Crime No. 120/2022 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW11-சுந்தர் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 17.10.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

1. நான் தற்போது வேலூர் மாவட்டம் நெடுஞ்சாலை துறையில் கோட்ட பொறியாளர் (திட்டங்கள் மற்றும் அலகு ) ஆக பணிபுரிந்து வருகிறேன். 05.01.2022 முதல் 18.12.2022 வரை நான் கூடுதல் பொறுப்பு கடலூர் மாவட்டத்தில் கோட்ட பொறியாளராக (திட்டங்கள் மற்றும் அலகு ) நெடுஞ்சாலை துறையில் பணி செய்து வந்தேன். கடந்த 24.03.2022 தேதி இவ்வழக்கின் சாட்சி அ.சா.10 அமரஜோதி மேற்படி அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வந்தார். அ.சா.10 அமரஜோதி எனக்கு அலைபேசியில் என்னை அழைத்து உதவி பொறியாளர் சந்திரா என்பவரை பவானி காவல் நிலைய உதவி ஆய்வாளர் கைது செய்துள்ளதாக தனக்கு தகவல் தெரிவித்தாக என்னிடம் கூறினார்.

2. பின்னர் அன்றைய தினமே இரவு 7.00 மணியளவில் காவல் நிலைய அதிகாரி அலைபேசியில் அழைத்து உதவி பொறியாளர் சந்திர அவர்களை கைது செய்துள்ளதாக கூறினார். நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதா நான் கேட்டேன். முதல் தகவல் அறிக்கை 25.03.2022 தேதி முதல் தகவல் அறிக்கையின் நகல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு கிடைக்கப்பட்டது. மேற்படி நான் நெடுஞ்சாலை துறை முதன்மை இயக்குநருக்கு தெரியப்படுத்தினேன். நன்னடத்தை விதிகள் 17 (E) படி பணி இடைநீக்கம் செய்யப்பட்டார். அன்றைய தினம் அவர் விடுப்பு எதுவும் பெறவில்லை. போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி** குறுக்கு விசாரணை-

1. அ.சா.10 அமரஜோதி எப்பொழுது எனக்கு போலிசார் கைது செய்துள்ளதாக எனக்கு தகவல் சொன்னார் என்றால் 24.03.2022 தேதி மாலை சுமார் 4.00 மணியளவில் தகவல் சொன்னார். நான் மேற்படி தகவல் கிடைத்தவுடன் ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் நான் என் அலுவலகத்தில் பணிபுரியும் நபர்களிடம் விசாரிக்க அறிவுறுத்தினேன். முதல் தகவல் அறிக்கையை நான் வாங்கி பார்க்க நான் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. முதல் தகவல் அறிக்கை எப்பொழுது கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பெறப்பட்டது என்றால் 25.03.2022 தேதியன்று பெறப்பட்டுள்ளது. நேரம் சரியாக தெரியாது.

2. உதவி பொறியாளருக்கு நேரடி உயர் அதிகாரி யார் என்றால் உதவி கோட்ட பொறியாளர்

ஆவார். அப்பொழுது பணி செய்து உதவி கோட்ட பொறியாளர் பெயர் என்னவென்றால் சுப்பிரமணி ஆகும். எனக்கு உயர் அதிகாரி கண்காணிப்பு பொறியாளர் சென்னை. கண்காணிப்பு பொறியாளருக்கு உயர் அதிகாரி யார் என்றால் தலைமை பொறியாளர் ஆகும். நான் முதல் தகவல் அறிக்கையின் தகவலை யாருக்கு கொடுத்தேன் என்றால் கண்காணிப்பு பொறியாளர் சென்னை மூலமாக தலைமை பொறியாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு தலைமை பொறியாளர் அவர்களால் முதன்மை இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது.

3. நான் தகவல் தெரிந்து பவானி தாலுக்காவில் உள்ள நெடுஞ்சாலை துறை அதிகாரி யாரேனும் அனுப்பி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது குறித்து விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நான் முதல் தகவல் அறிக்கையை வாங்கி பார்த்தேனா என்றால் பார்த்தேன். நீங்கள் சொந்த விசயமாக பலமுறை பவானி வந்துள்ளீர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ப்பட்டதற்கு நெடுஞ்சாலை துறை அதிகாரியும் சம்பந்தம் என்றால் முதல் தகவல் அறிக்கை கிடைக்கப்பெற்று துறை ரீதியான நடவடிக்கை மட்டும் எடுக்கப்பட்டது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதற்கு துறைக்கு எந்த சம்பந்தமும் இல்லை. என் மீது துறை ரீதியான நடவடிக்கை முடிக்கப்பட வேண்டும் என குறுக்கு விசாரணை செய்யப்பட்டது. மேற்கூறிய கேள்வி இவ்வழக்கிற்கு தேவையில்லை என்பதால் நிராகரிக்கப்பட்டது- நான் காவல் துறையில் வழக்கு கோப்புகளை வாங்கி பார்த்தேனா என்று கேள்வி கேட்கப்பட்டது- இந்நீதிமன்றத்தால் இக்கேள்வி நிராகரிக்கப்பட்டது.

4. இந்நீதிமன்றத்திற்கு வருவதற்கு அழைப்பாணை முதலில் வரப்பட்டது- பின்னர் போன் மூலமாக அறிவித்தார்கள். நான் மொத்தம் எத்தனை இந்நீதிமன்றத்திற்கு வந்தேன் என்றால் மொத்தம் 3 முறை வந்தேன். அ.சா.10 அமரஜோதி 19.08.2024 குறுக்கு விசாரணை செய்த போது நான் நீதிமன்றத்திற்கு வந்திருந்தேன் என்றால் சரிதான். இந்நீதிமன்றத்தில் நடந்ததாக சொல்லப்படும் விசயத்தை நான் நேரில் பார்க்கவில்லை. முதல் விசாரணையிலும் பார்த்தாக சொல்லவில்லை. இவ்வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை அலைபேசியில் விசாரித்தார்கள். தேதி ஞாபகமில்லை. மொத்தம் எத்தனை முறை என்னை விசாரித்தார்கள் என்றால் ஒரு முறை விசாரித்தார்கள்.